# நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரின் 2 ஆம் அமர்வு!

## இன்று தொடங்குகிறது!

புதுடெல்லி, மார்ச் 9 -
நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரின் இரண்டாவது அமர்வு இன்று மீண்டும் கூடுகிறது. மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லாவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவாக திரிணாமுல் காங்கிரஸ் எம்.பி.க்கள் வாக்களிப்பாளர்கள் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

பட்ஜெட் கூட்டத் தொடரின் முதல் அமர்வின் போது அமளியில் ஈடுபட்டதாகக் கூறி எதிர்க்கட்சி எம்.பி.க்கள் 8 பேரை சபாநாயகர் ஓம் பிர்லா இடைநீக்கம் செய்வதாக அறிவித்தார்.

மேலும், மக்களவையில் பிரதமர் மோடியை முற்றுகையிட எதிர்க்கட்சி எம்.பி.க்கள் திட்டமிட்டிருந்ததாகவும் அவர் குற்றம்சாட்டினார். இதனால் கடும் அதிருப்தியடைந்த எதிர்க்கட்சி



கள், ஓம் பிர்லா பாரபட்சமாக செயல்படுவதாக குற்றம்சாட்டியதுடன், அவரை...

இதனிடையே, வளைகுடா போர், எண்ணெய் தட்டுப்பாடு, ரூபாய் மதிப்பு வீழ்ச்சி உள்ளிட்ட நாடாளுமன்றத்தில் எழுப்ப வேண்டிய முக்கிய பிரச்சனைகள் குறித்து விவா திப்பதற்காக இந்தியா கூட்டணிக் கட்சிகளின் நாடாளுமன்றக் குழுத் தலைவர்களின் கூட்டம் இன்று காலை 10 மணியளவில் நடைபெறுகிறது. நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே அறையில் இக்கூட்டம் நடைபெறுகிறது.

---

### கடலூர் மாவட்டத்தில்

# ரூ.214.42 கோடி மதிப்பீட்டிலான பல்வேறு திட்டப் பணிகள்!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அடிக்கல் நாட்டினார்!

*கடலூர், மார்ச் 9-*
*வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார், கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், மாநகராட்சி மேயர் திருமதி சுந்தரிராஜா, துணைமேயர் பா.தாமரைச்செல்வன் ஆகியோர் முன்னிலையில் ரூ.214.42 கோடி மதிப்பீட்டில் திருவந்திபுரம் தேவநாதசுவாமி திருக்கோயில் சாலையில் அலங்கார விளக்குகள் அமைத்தல், தென்பெண்ணையாறு வெள்ளத்தடுப்பு பணி, அஞ்சலையம்மாள் அறிவுலக நூலக கட்டடம், மணிகுண்டு புனரமைத்தல், அங்கன் மையம் கட்டடம் ஆகிய பணிகளுக்கு 05.03.2026 அன்று அடிக்கல் நாட்டினார்.*

*இந்நிகழ்ச்சியில் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவிக்கையில்,*

*திருவந்திபுரம் தேவநாத சுவாமி திருக்கோயிலுக்கு இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்கலிலிருந்தும் பக்தர்கள் வந்த செல்கின்றனர். திருவிழா, சுபமுகூர்த்த தினங்கள், சித்திரை பௌர்ணமி அன்று தேர் திருவிழா மற்றும் புரட்டாசி மாதங்களில் பக்தர்கள் இரவு நேரங்களிலும் தங்கி தரிசனம் மேற்கொண்டு செல்கின்றனர். இரவு நேரங்களில் கோயிலுக்கு வந்துசெல்லும் பக்தர்களின் நலன் கருதி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் மாநில நிதிக்குழு மான்யத் திட்டத்தின் கீழ் ரூ.75.00 இலட்சம் மதிப்பீட்டில் 645 மீ நீளத்திற்கு 70 எண்ணிக்கையிலான கம்பங்களுடன் கூடிய அலங்கார மின் விளக்குகள் அமைக்கும் பணிக்கு இன்றைய தினம் அடிக்கல் நாட்டப்பட்டது.*

*பெண்ணையாற்றில் பருவமழை காலங்களில் ஏற்படும் வெள்ள பெருக்கினால் கரையருகே உள்ள பல்வேறு பகுதிகளில் பாதிப்புகள் ஏற்படுகிறது. வெள்ளக் காலங்களில் ஏற்படும் பாதிப்புகளை தவிர்த்திடும் வகையில் பல்வேறு நிரந்தர வெள்ளத்தடுப்பு பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக பெண்ணையாற்றில் மிகவும் பாதிக்கக்சடிய பகுதியான குமரப்பன் நகர் முதல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிர்புறம் வரை பெண்ணையாற்றின் வலது கரையில் மாவட்ட கனிமவள அறக்கட்டளை நிதியின் கீழ் ரூ.14.50 கோடி மதிப்பீட்டில் 323 மீ தடுப்புச்சுவர் அமைக்கும் பணிக்கும், பெண்ணையாற்றில் மிகவும் பாதிக்கக்கூடிய பகுதிகளான மஞ்சக்குப்பம், ஓம் சக்தி நகர், பூந்தென்றல் நகர், குண்டு உப்பலவாடி, கண்டக்காடு, உச்சிமேடு, நானமேடு மற்றும் சுப உப்பலவாடி கிராமங்களில் ரூ.57 கோடி மதிப்பீட்டில் 350மீ கருங்கல் சுவர், 2,105மீ கருங்கல் சரிவுச்சுவர், 90மீ தடுப்புச்சுவர் மற்றும் கரைகள் பலப்படுத்துதல் போன்ற வெள்ளத்தடுப்பு பணிகளுக்கும், சின்னவாய்க்கால், வண்டிப்பாளையம் மற்றும் புலிகுத்தி ஓடை பிரிவு வாய்க்கால்களில் மழைகாலங்களில் பெய்கின்ற மழைநீர் விரைவாக வாய்க்காலில் வடிந்திடும் வகையில் மாநில பேரிடர் நிவாரண நிதியின் கீழ் ரூ.60.40 கோடி மதிப்பீட்டில நிரந்தர வெள்ளத்தடுப்பு பணிகள் மேற்கொள்ளவும் இன்றைய தினம் அடிக்கல் நாட்டப்பட்டது.*

*செம்மண்டலம் குண்டு சாலையில் பள்ளிக்கல்வித் துறை சார்பில் ரூ.110.26 கோடி மதிப்பீட்டில் அஞ்சலையம்மாள் அறிவுலக நூலகம் கட்டடம் கட்டும் பணி தொடங்கிவைக்கப் பட்டது. இந்நுலகம் தரைதளம் மற்றும் 4 தளங்களுடன் அனைத்து அடிப்படை அம்சங்களுடன் மாணவர்கள் மற்றும் போட்டித்தேர்வர்கள் பயிலும் வகையில் கட்டப்படவுள்ளது.*

*மஞ்சக்குப்பம் பகுதியில் தொண்மை வாய்ந்த மணிக்கூண்டினை பெருநிறுவன சமூக பொறுப்புணர்வு நிதியின் கீழ் ரூ.50 இலட்சம் மதிப்பிட்டில் மறுசீரமைப்பு செய்து நான்கு புறமும் கடிகாரம் பொருத்தப்பட்டு மின்விளக்குகளுடன் புனரமைக்கும் பணிக்கும், ஒருங்கிணைந்த அங்கன்வாடி மையம் பெருநிறுவன சமூக பொறுப்புணர்வு நிதியின் கீழ் ரூ.1.6 கோடி மதிப்பிட்டில் வகுப்பறைகள், சமையலறை, ஆசிரியர் அறை, கழிவறை போன்ற வசதிகளுடன் கட்டும் பணிக்கும் இன்றைய தினம் அடிக்கல் நாட்டப் பட்டுள்ளது என மாண்புமிகு வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் தெரிவித்தார்.*

*இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் ர.அ.பிரியங்கா பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் (கட்டடம்) சிவசங்கரநாயகி, நீர்வளத்துறை செயற்பொறியாளர் பாலமுருகன், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்ட அலுவலர் செல்வி உட்பட பலர் கலந்து கொண்டனர்.*

# உலக மகளிர் நாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

**சென்னை, மார்ச் 9 -**
**‘உலக மகளிர் நாளை’யொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.**

முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் ‘உலக மகளிர் நாளை’ முன்னிட்டு சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ள வாழ்த்துப் பதிவு வருமாறு:

வெல்லும் தமிழ்ப் பெண்களே...

நீங்கள் வெல்வதற்கு உலகும் உங்களுக்குத் துணை நிற்க திராவிட மாடலும் இருக்கிறது!

தடைகளைத் தகர்த்தெறிந்து தொடர்ந்து முன்னேறுங்கள். உங்களது பயணத்தின் ஒவ்வொரு அடியிலும் உடன்நிற்க நமது திராவிட மாடல் அரசு இருக்கிறது... அனைவருக்கும் உங்கள் ஸ்டாலினின் உலக மகளிர் நாள் நல்வாழ்த்துகள்!

இவ்வாறுமுதல்வர்மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

# வா தலைவா வா...!



தடைகளை
விடைகளாக்கும்
தலைவா..

முட்டுக்
கட்டைகளை
வெற்றிக்
கோப்பைகளாக்கும்
முதல்வா..

போர்க்களங்களை
புகழ்க்
கிரீடங்களாக்கும்
புதல்வா..

திறமையை
துடுப்பாக்கி

திசை
எட்டையும்
கிழக்காக்கும்

திராவிட
மாடலின்
இறைவா...

‘பூமி
தன்னைத் தானே
சுற்றிக் கொண்டு

சூரியனை
சுற்றி வருகிறது’

என்னும்

அறிவியல்
தத்துவத்தை

அறிவாலய
தட்பமாக்கிய
ஞானக்காரரே..

சக்கர
வியூகங்களில்
சிக்க

நான்
அபிமன்யூ
அல்ல

அந்த
சக்கரத்தையே
சுட்டு விரலில்

சுழலவிடும்

அறிவாலயத்து
கிருஷ்ண பரமாத்மா
என்பதை

இந்நாட்டு
அரசியலுக்கு

தெளியவைத்த
தென்னாட்டு
நாயகரே...

எதிரிகள்
ஏவும்
கணைகளை
எல்லாம்

கையில்
பிடித்து
காது குடையும்

நற்றமிழ்
கலைஞரின்
நகல் வடிவே...

அச்சமெனும்
சொல் அறியா

ஆரூரின்
தேரழகே..

மிரட்டல்
உருட்டலுக்கு

விழி சிமிட்டா
மிசா வீரமே..

ஓயாத
உழைப்பே

ஒப்பில்லா
வியப்பே..

“முத்துவேல்
கருணாநிதி
ஸ்டாலின்
எனும் நான்”...

இந்த மந்திர
மொழியை
மறுமுறை கேட்க

உலகமே
ஆர்வத்தில்..

அதற்கான
ஒரு விரல்
புரட்சிக்கு

ஊரெல்லாம்
ஆயத்தத்தில்..


ஆம்..

உதயசூரியனின்

ஒளியும்
ஒலியில் மகிழ

ஓட்டுப்பதிவு
எந்திரங்களும்
ஆர்வத்தில்...

**என்ன நாஞ் சொல்றது**



**மருது அழகுராஜ்**
*கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்*

### முதல்வராக மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்றதிலிருந்து

# கரூர் மாவட்டத்திற்கு பல்வேறு திட்டப் பணிகள் நிறைவேற்றம்!

## வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. பேச்சு!

கரூர், மார்ச் 9 –
கரூர் மாநகராட்சி பகுதிகளில் ரூ.1150 கோடி மதிப்பில் வளர்ச்சி திட்ட பணிகள் நிறைவேற்ற ப்பட்டுள்ளன என ரூ.2.40 கோடியில் புதிதாக கட்டப்பட்ட நீச்சல் குளத்தினை திறந்து வைத்து கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி தெரிவித்தார்.



கரூர் மாநகராட்சி, மண்டலம் 2 மாநகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் ரூ.2.40 கோடி மதிப்பீட்டில் புதிதாக நீச்சல் குளம் கட்டப்பட்டுள்ளது. நீச்சல் குளத்தை கரூர் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில்பாலாஜி திறந்து வைத்தார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழிகாட்டுதலின்படி கரூர் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் பொது மக்கள் பயன்பெறக்கூடிய வகையில் ரூ.2.40 கோடி மதிப்பீட்டில் மிகச்சிறப்பாக, அழகாக நேர்த்தியாக வடிவமைக்கப்பட்ட புதிய நீச்சல் குளத்தினுடைய பணிகள் முடிக்கப்பட்டு, இன்றைய தினம் பொதுமக்கள் பயன்பாட்டிற்குத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த நீச்சல் குளத்தைப் பொறுத்தவரை. மாணவர்கள் நம்முடைய கரூர் மாவட்டத்திலிருந்து பயிற்சி பெற்று பல்வேறு போட்டிகளில் பங்கேற்பதற்கு வசதியாக வடிவமைக்கப்பட்டு, அரசினுடைய விதிமுறைகளுக்கு உட்பட்டு திட்டமிடப் பட்டு மிகச்சிறப்பாக செய்து முடிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த 2021ஆம் ஆண்டு மே மாதம் 7ஆம் தேதி தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக தளபதி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் முதல் கரூர் நகராட்சியை மாநகராட்சியாகத் தரம் உயர்த்தப்பட்டது, மண் சாலைகளாக இருந்த சாலைகளையெல்லாம் கணக்கெடுத்து புதிய தார் சாலைகளாக அமைக்க வேண்டிய பணிகளும், அதேபோல சாக்கடை வசதிகள், தெருவிளக்குகள் கட்டிடப் பணிகள் என பல்வேறு கோரிக்கைகள் பொதுமக்கள் முன்வைத்தார்கள்.

குறிப்பாகப் பல ஆண்டுகால கோரிக்கையாக இருந்த புதிய பேருந்து நிலையம் புறநகர் பகுதியில் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை தேர்தல் களத்தில் முதலமைச்சர் அவர்கள் அளித்த தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றி ரூ. 40 கோடி ரூபாய் முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, துணை முதலமைச்சர் அவர்கள் திருக்கரங்களால் புதிய பேருந்து நிலையம் பொதுமக்களுடைய பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்கள்.

கரூர் மாநகராட்சியைப் பொறுத்தவரை ஏறத்தாழ ரூ.418 கோடி ரூபாய் அளவிற்கு இந்த 5 ஆண்டுகளில் சாலை வசதிகள், சாக்கடை வசதிகள், தெருவிளக்குகள், கட்டிடப் பணிகள் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் மிகச்சிறப்பாக நிறைவு பெற்று பொதுமக்களுடைய பயன்பாட்டிற்கு கொண்டு வந்துள்ளோம். புதிய காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைப்பதற்காக 245 கோடி ரூபாய் நிதிகளை முதலமைச்சர் அவர்கள் வழங்கி அதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு, அந்தப் புதிய காவிரி குடிநீர்த் திட்டப் பணிகளும் தொடங்க இருக்கின்றோம்.

கரூர் மாநகராட்சியில் விடுபட்ட பகுதி களுக்குப் புதிய பாதாளச் சாக்கடை என்ற தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றக்கூடிய வகையில் 485 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அதற்கான திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு இப்பொழுது ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளது. அது இறுதி செய்தவுடன் அந்தப் பணிகளும் தொடங்க இருக்கின்றோம்.

கரூர் மாநகராட்சியைப் பொறுத்தவரை இந்த ஐந்தாண்டுகளில் 1,150 கோடி ரூபாய் அளவிற்கான வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கு முதலமைச்சர் அவர்கள் நிதிகளைக் கொடுத்து பொதுமக்களுடைய பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது. சுதந்திரம் பெற்ற காலம் முதல் ஒரு மாநகராட்சி பகுதியில் குறிப்பாக நம்முடைய கரூர் மாநகராட்சி பகுதிகளில் இந்த அளவிற்கு நிதிகள் வந்த வரலாறு இல்லை. இந்த 5 ஆண்டுகளில் கரூர் மாவட்டத்தின் மீது சிறப்புக் கவனம் செலுத்தி, கேட்ட அரசு திட்டங்கள் அத்தனைக்கும் நிதிகளைக் கொடுத்து பணிகளை செய்து, இன்று பொதுமக்களுடைய பயன்பாட்டிற்குத் திறந்து வைக்கக் கூடிய ஒரு வாய்ப்பை முதலமைச்சர் அவர்கள் உருவாக்கித் தந்தார்கள்.

பொதுவாக என்னைப் பொறுத்தவரை இந்த கரூர் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராக ஒரு மகிழ்ச்சியான நாளாக இன்றைய நாளை நான் கருதுகின்றேன். பொது மக்களிடத்தில் சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்றிய தோடு, மக்களிடத்தில் சொல்லாத கோரிக்கைகளையும் முழுமையாக நிறைவேற்றி இருக்கின்றோம்.

கரூர் காமராஜ் மார்க்கெட், வணிக வளாகமாக இருக்கட்டும். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருக்கக்கூடிய அறிவியல் பூங்கா, பிஎம்எஸ். பள்ளி அறிவுசார் மையம், வெங்கமேடு மீன் மார்க்கெட், மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் முதலமைச்சருடைய படைப்பகம், திருவள்ளுவர் விளையாட்டு மைதானத்தில் புதிய நூலகம் 6 கோடியே 90லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரவாற்றுச் சிறப்புமிக்க திட்டங்களை, காலத்திற்கும் நிலைத்து நிற்கக்கூடிய வரலாறு படைக்கக்கூடிய திட்டங்களை முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கின்றார்கள். இன்னும் இருக்கின்ற தேவைகளுக்கும் நிதிகளை வழங்க தயாராக இருக்கின்றார்கள்.

இவ்வாறு செந்தில் பாலாஜி பேசினார்.

மாவட்ட வருவாய் அலுவலர் கு. விமல்ராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.இளங்கோ (அரவக்குறிச்சி), க.சிவகாமசுந்தரி (கிருஷ்ணராயபுரம்), மாநகராட்சி மேயர் வெ.கவிதா, மாநகராட்சி ஆணையர் கே.எம். சுதா. துணை மேயர் ப.சரவணன். மண்டலக் குழு தலைவர்கள் எஸ். பி.கனகராஜ் க.அன்பரசு, ஆர்.எஸ் ராஜா, சக்திவேல், மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

### மார்ச்.10இல் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்கும் நிகழ்ச்சியில்

# ஈரோடு தெற்கு மாவட்டக் கழகத்தினர் திரளாக பங்கேற்பீர்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் சு.முத்துசாமி அறிக்கை!

*ஈரோடு, மார்ச். 9-*
*ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளர் சு.முத்துசாமி அறிக்கை வருமாறு:-*



*ஈரோடு தெற்கு மாவட்டம், மொடக்குறிச்சியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முழு உருவ வெண்கல சிலை திறப்பு விழா 10.03.2026 செவ்வாய்க் கிழமை காலை 10.00 மணியளவில் தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதி அவர்கள் காணொளி காட்சி வாயிலாக திறந்து வைக்க உள்ளார்கள்.*

*எனவே, இந்நிகழ்ச்சியில் இந்தியா கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் தோழமை அமைப்பு நிர்வாகிகள், தி.மு.கழக மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு, அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், சிறப்பு அழைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், BLA2, BLC, BDA, கழகத் தோழர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு விழாவை சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.*

*இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

